සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

මුදල් අමාත්‍යාංශය

සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා උපයෝජ්‍ය උපයෝජ්‍ය
රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

நிதி அமைச்சு

சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும்
கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

Ministry of Finance

State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development


| | | |
|---|---|---|
| **මගේ අංකය**<br>எனது இல DSD/HO/IT/11/CRM<br>**My No** | **ඔබේ අංකය**<br>உமது இல ........................<br>**Your No** | **දිනය**<br>திகதி 2020.11.03<br>**Date** |

மாவட்ட செயலாளர்/ மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்,
பிரதேச செயலாளர்,
மாவட்ட சமுர்த்தி பிரதிப்பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர்,
சகல சமுர்த்தி முகாமையாளர்கள்/ மேம்படுத்துகை உத்தியோகத்தர்கள்,
பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

**<u>பயனாளிகள் முகாமைத்துவ மொடியூலை (CRM) செயற்படுத்துதல்/ அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளல்.</u>**

சமுர்த்தி நிவாரணம் மற்றும் சமூக பாதுகாப்புக் கொடுப்பனவுகள் தொடர்பான தகவல் முகாமைத்துவத்தின் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ள பயனாளிகள் முகாமைத்துவ (CRM) கணினி நிகழ்ச்சித்திட்டம் (http://crm.esamurdhi.gov.lk/) தொடர்பில் சகல பிரதேச செயலகங்களிலும் நிவாரண மற்றும் சமூக பாதுகாப்பு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் பயிற்றப்பட்டு வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்றது.

இந்த மொடியூவின் மூலம் நிவாரணம் பெறுவோர் பெயர்பட்டியலை அதன் பெறுமதியுடன் இற்றைப்படுத்தி பராமரித்துச் செல்லப்படல் வேண்டும். அதிகமான பிரதேச செயலகங்கள் இந்த கணினி நிகழ்ச்சித்திட்டத்தில் தமது பட்டியலை இற்றைப்படுத்தியதாக பராமரித்துச் செல்லப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு சில பிரதேச செயலகப்பிரிவுகளில் உரிய பிரகாரம் இற்றைப்படுத்தப்படாமலிருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

தற்போது வலையமைப்பில் உள்ள தகவல்கள் 03 மாதங்களுக்குள் இற்றைப்படுத்தப்படாமலிருப்பின் (ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர்) அத்தோடு வலையமைப்பிலுள்ள பெயர்பட்டியலில் பல திருத்தங்கள் இருப்பின் புதிய பெயர்ப்பட்டியலை, Excel ஊடாக தலைமைக்காரியாலயத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு வழங்கி இற்றைப்படுத்திக் கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வாறு Excel கோப்பு ஒன்றினூடாக பெயர்ப்பட்டியலை பெற்றுக் கொள்ளும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும் என்பதுடன் 2020.11.15ம் திகதிக்கு முன்னர் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் குறித்த உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு தனது பிரதேச செயலகப்பிரிவின் பெயர்ப்பட்டியலை பிழையின்றி இற்றைப்படுத்தியிராவிடின் அதனை மேற்கொள்ளுமாறு இறுதித் தடவையாக அறியத் தருகின்றேன்.


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

2021 ஜனவரி மாதம் நிவாரணத் தொகையினை வழங்கும் பொருட்டான அறிக்கை CRM மொடியூவில் Fund Release Report மூலம் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

CRM மொடியூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அறிக்கை மூலம் பிரிவு/ வலய மற்றும் பிரதேச செயலகப் பிரிவு மட்டம் வரை அறிக்கையினை பெற்றுக் கொள்ளமுடியும். இந்த அறிக்கையினை பரீட்சித்துப் பார்த்து சரியான நிவாரண அளவினை பராமரித்துக் கொள்ளல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு நிவாரணம் பெறுபவரினதும் நிவாரணப் பெறுமதியினை கணினி நிகழ்ச்சித்திட்டத்தில் பிழையின்றி உட்படுத்தியிருத்தல் வேண்டும். அத்துடன் சரியான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சமயத் தலங்கள்/ முதியோர் இல்லம்/ சிறுவர் இல்லம்/ மாற்றுத்திறனாளிகள் உள்ள இல்லங்கள் போன்ற இடங்களிலுள்ள நிவாரணம் பெறுவோரின் தொகுதி பிழையின்றி பதியப்படல் வேண்டும்.

மேலும் இந்த மொடியூலில் அடங்கியுள்ள தரவுகள் உணர்வுபூர்வமான தரவுகள் என்பதனால் தரவுகளின் இரகரியத்தன்மையினைக்காப்பது மற்றும் பிழையற்ற நிலையினைப் பேனுவது தங்களின் பொறுப்பாகும்.
(தரவுகளின் உண்மைத்தன்மையினைக்காக்கும் பொறுப்பினை பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தலைமையக முகாமையாளர் வகித்தல் வேண்டும். தரவுகளின் இரகசியத்தன்மையினைக் காக்கும் பொறுப்பினை வலையமைப்பினை பயன்படுத்தும் சகலரும் வகித்தல் வேண்டும்.)

இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

மேலும் இவை தொடர்பான மேலதிக விபரங்களை தகவல் தொழில்நுட்ப பிரிவின் கீழுள்ள உத்தியோகத்தர்களை தொடர்பு செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை வினயமுடன் அறியத் தருகின்றேன்.

திரு. ஸமிந்த பண்டாரநாயக்க - 071 8813836
திரு. தேவன்ராஜ் - 071 4396406
திருமதி. துஷாரி அபேசிங்ஹ - 071 4425369

ஆர்.பீ.பி. திலக்கசிரி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதி:-
01. செயலாளர், மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - த.கூ.க. பொருட்டு
02. இராஜாங்க செயலாளர், சமூக பாதுகாப்புப் பிரிவு - த.கூ.க பொருட்டு
03. உள்ளகக் கணக்காய்வாளர் - த.கூ.க. பொருட்டு
04. சகல பிரிவுத் தலைவர்கள் - த.கூ.க.பொருட்டும் உ.ந. பொருட்டும்

Translated By:- M.M.M. Jawhar (Translator)